Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

25.4.2023

ஊடக வெளியீடு

Ir. பத்மநாதன் K.

தலைமை நிர்வாக அதிகாரி

PBA ஹொல்டிங் பெர்ஹாட் மற்றும் PBAPP.

**பினாங்கு மேக விதைப்பு: 2023, ஏப்ரல் இறுதியில் தொடங்கும்**

- **NADMA RMAF-ஐ மேக விதைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளது.**
- **MET துறை 29.4.2023 முதல் 7.5.2023 வரையிலான தேதிகளைப் பரிந்துரைத்துள்ளது.**
- **இலக்கு: ஆயர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணைக்கான நீர்ப்பிடிப்பு பகுதிகள்.**

பினாங்கு, செவ்வாய், 25.4.2023: மலேசிய அரசு ஆகாயப் படை (RMAF) விமானங்கள் பினாங்கு தீவில் உள்ள நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இம்மாத இறுதியிலிருந்து மேக விதைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பினாங்கில் மேற்கொள்ளப்படும் 2023ஆம் ஆண்டிற்கான முதல் மேக விதைப்பு நடவடிக்கைகளுக்கு வானிலை ஆய்வுத் துறை (MET Department) 29.4.2023 முதல் 7.5.2023 வரையிலான காலக்கெடுவைப் பரிந்துரைத்துள்ளது. மேக விதைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வானிலை உகந்ததாக இருக்க வேண்டும்.

ஆயர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் அதிக மழையை ஏற்படுத்துவதே இதன் முதன்மை நோக்கமாகும். இந்த அணைகளில் இயன்ற அளவு மூல நீரை நிரப்ப கனமழை தேவைப்படுகிறது.

பின்வரும் அட்டவனை அணைகளின் கொள்ளளவைக் காட்டுகிறது:

| **அணை கொள்ளளவு** | | |
|---|---|---|
| | 1.1.2023 | **24.4.2023** |
| ஆயர் ஈத்தாம் அணை | 82.5% | **44.8%** |
| தெலுக் பஹாங் அணை | 64.0% | **48.6%** |

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

1.1.2023 முதல் ஆயர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணையின் கொள்ளளவு முறையே 37.7% மற்றும் 15.4%-ஆக குறைந்துள்ளன. இது நீர்ப்பிடிப்பு பகுதிகளில் குறைந்த மழைப்பொழிவு (காலநிலை மாற்றத்துடன் தொடர்புடையது) மற்றும் 2023 இல் பினாங்கு மாநிலத்தில் அதிக நீர் தேவையும் இதற்கு முதன்மை காரணமாகும்.

1.1.2023 முதல் நீர்ப்பிடிப்பு விழுக்காடு அதிகளவில் குறைந்துள்ளது. தெலுக் பஹாங் அணையின் அதிகபட்ச கொள்ளளவு 19,240ML ஒப்பிடுகையில் ஆயர் ஈத்தாம் அணையின் அதிகபட்ச செயல்திறன் கொள்ளளவு 2,160மில்லியன் லிட்டர் (ML) ஆகும்.

கடந்த ஆண்டு நீர்ப்பிடிப்பு பகுதிகளில் குறைந்த மழைப்பொழிவு காரணமாக 2022ஆம் ஆண்டின் இறுதியில் இரண்டு அணைகளிலும் 100% கொள்ளளவிற்கு நிரப்பப்படவில்லை என்பதை நினைவில் கொள்ளவும்.

NADMA, MET, RMAF மற்றும் BKSA உரிய நேரத்தில் பதிலளிப்பு

பினாங்கு மாநில அரசாங்கமும், பினாங்கு மாநில நீர் விநியோக வாரியமும் (PBAPP) மேக விதைப்பு நடவடிக்கை வெற்றிப் பெறும் என எதிர்பார்க்கிறது.

மேக விதைப்பு நடவடிக்கைகளுக்கு நிதியளிக்க பினாங்கு மாநில அரசாங்கம் ரிம400,000 பட்ஜெட்டுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. 13.4.2023 அன்று, PBAPP, மத்திய அரசாங்க உதவியைக் கோரி ஊடக அறிக்கையை வெளியிட்டது.

பினாங்கு நீர் பயனீட்டாளர்கள் ஒத்துழைப்பை நல்க வேண்டும்

2023 ஆம் ஆண்டில், பினாங்கில் ஏற்படக்கூடிய நீர் நெருக்கடியின் அபாயங்களைக் குறைக்க மத்திய அரசாங்கம், பினாங்கு மாநில அரசாங்கம், NADMA, RMAF, MET துறை, BKSA மற்றும் பினாங்கு நீர் விநியோக வாரியம் (PBAPP) ஆகியவை ஒன்றிணைந்து செயல்படுகின்றன.

ஆயிர் ஈத்தாம் அணை மற்றும் தெலுக் பஹாங் அணையின் இருப்புக்கள் பாதுகாப்பான நிலைக்கு மீட்டெடுக்கும் வரை, பினாங்கு நீர் பயனீட்டாளர்கள் (வீடுகள்) நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி தங்களின் பங்கை ஆற்றுவார்கள் என்று PBAPP எதிர்ப்பார்க்கிறது.

2022 ஆம் ஆண்டில், பினாங்கின் மொத்த நீர்ப் பயன்பாடு ஒரு நாளைக்கு 868 மில்லியன் லிட்டர் (MLD) அதாவது சுமார் 61.5% உள்நாட்டு நீர் பயன்பாடு ஆகும்.

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

பிப்ரவரி 2023 இல், பினாங்கில் மொத்த நீர்ப் பயன்பாடு சராசரியாக 944MLD ஆக உயர்ந்துள்ளது.

எனவே, பினாங்கு நீர் பயனீட்டாளர்கள் பின்வரும் நீர் சேமிப்பு நடைமுறைகளைக் கடைப்பிடித்து தினசரி நீர் பயன்பாட்டைக் குறைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்:

1. முடிந்தவரை நீர்க்குழாய் (hose) பயன்படுத்துவதைத் தவிர்க்கவும். நீர்க்குழாய் பயன்படுத்துவதால் நீர் விரையமாகிறது.
2. உங்கள் கார் அல்லது மோட்டார் சைக்கிளை அடிக்கடி கழுவாதீர்கள்.
உங்கள் வாகனத்தைக் கழுவ வேண்டும் என்றால், நீர்க்குழாய்க்குப் பதிலாக வாளி மற்றும் ஈரமான துணி அல்லது 'sponge' பயன்படுத்தவும்.
3.உங்கள் தோட்டம் மற்றும் செடிகளுக்கு நீர்க்குழாய்க்குப் பதிலாக நீர்ப்பாசன கேனைப் பயன்படுத்தி நீரைப் பாய்ச்சவும்.
4. உங்கள் தாழ்வாரம் அல்லது நடைபாதையை நீர்க்குழாயைப் பயன்படுத்திக் கழுவுவதற்குப் பதிலாகத் துடைப்பம் கொண்டு கூட்டவும்.
5. அனைத்து கசிவு குழாய்கள் அல்லது கழிப்பறை அமைப்புகளை உடனடியாகச் சரிச்செய்யவும்.
6. உங்கள் வீடு அல்லது அலுவலகத்தில் எந்த குழாய்களிலும் நீர் கசிய விடாதீர்கள்.
7. உங்கள் பிள்ளைகளுக்குக் குழாய்களைச் சரியாக அடைக்க
கற்றுக்கொடுங்கள்.
8. உங்கள் வீட்டில் அதிகமானத் துணிகள் இருக்கும்போது மட்டுமே சலவை இயந்திரத்தைப் பயன்படுத்தவும்.
9. துணிகளைக் கையால் துவைக்கும்போது, குழாயில் நீரை வழிய விடாதீர்கள். துணியைப் பிழியும்போது மட்டுமே குழாயைத் திறக்கவும்.
10. உணவு, பாத்திரங்கள் மற்றும் கரண்டிகளைக் கழுவும்போது மட்டுமே உங்கள் பாத்திரம் கழுவும் தொட்டியில் நீரை நிரப்பிக் கொள்ளவும்.
11. தரையைக் குழாய் அல்லது வாளியில் இருந்த நீரை பாய்ச்சி கழுவதற்குப் பதிலாகத் துடைக்கவும்.
12. பல் துலக்கும் போது குழாயை அடைக்கவும். வாயை கொப்பளிக்கும்போது மட்டுமே குழாயைத் திறக்கவும்.
13. உங்கள் கைகளில் சோப்பு போடும் போது குழாயை அடைக்கவும். கைகளைக் கழுவும் போது திறந்து விடவும்.
14. குறைந்த நேரத்தில் குளிக்கவும்.
15. உங்கள் உடலில் சோப்பு போடும் போது 'ஷவரை' அடைக்கவும்.
16. உங்கள் கழிப்பறையில் "டபுள்-ஃப்ளஷ்" அமைப்புகளை நிறுவவும். வழக்கமாக, "half-flush" அதன் வேலையைச் செய்யும்.

Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

17. கழிப்பறைக்குள் குப்பைகளைக் கொட்டுவதைத் தவிர்க்கவும். குப்பைத் தொட்டியில் குப்பைகளைப் போடவும்.
18. சாலையோர பிரதான குழாய்கள் அல்லது குழாய்களில் கசிவு ஏற்பட்டால் 04 255 8255 என்ற எண்ணிற்கு, உடனடியாகப் புகாரளிக்கவும். 24 மணிநேரமும் சேவை வழங்குவோம்.

மேலும் உள்நாட்டு நீர் சேமிப்புக் குறிப்புகளுக்கு, www.pba.com.my அகப்பக்கத்தைப் பார்வையிடவும்.

நன்றி.

---


எழுத்தாக்கம் : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
கார்ப்பரேட் தகவல் பிரிவு
மின்னஞ்சல் : syarifah@pba.com.my